**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 04.06.2026**
**OS. No. 118/2016**
**வழக்கு சாட்சி DW.1–முத்து , த/பெ.கோபால்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1. 1ம் பிரதிவாதி மகாராஜனும், வாதி செல்லக்கிளியும் சகோதர, சகோதரிகள் என்றால் சரிதான். அவர்கள் கிருஷ்ணன் மற்றும் சின்னபொண்ணு ஆகியோரின் பிள்ளைகள் என்றால் சரிதான். மேற்கண்ட கிருஷ்ணன் கடந்த 30.07.1998 லும், சின்னபொண்ணு 17.10.2010 லும் இறந்துவிட்டனர் என்றும், அவர்களுக்கு 1ம் பிரதிவாதி மகாராஜனும், வாதி செல்லக்கிளியும் மட்டும் தான் வாரிசுகள் என்றால் சரியல்ல, மற்றொரு வாரிசாக அவர்களுக்கு மூத்தவர் அன்பழகன் என்பவர் உள்ளார். அவ்வாறு அன்பழகன் என்று மற்றொரு வாரிசு உள்ளதை காட்டக்கூடிய ஆவணங்கள் எதையேனும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றும், 1ம் பிரதிவாதி மகாராஜனும், வாதி செல்லக்கிளியும் மட்டும் தான் அவர்களது வாரிசுகள் என்றால் சரியல்ல.

2. கிருஷ்ணன் மற்றும் சின்னபொண்ணு ஆகியோருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவர்களது பிள்ளைகளான 1ம் பிரதிவாதி மகாராஜனும், வாதி செல்லக்கிளியும் மட்டும் தான் கூட்டாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, அன்பழகனும் அனுபவத்தில் உள்ளார். அவ்வாறு அன்பழகனின் அனுபவத்தில் உள்ளதை காண்பிக்க வருவாய் ஆவணங்களை எதையேனும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தாக எந்த சொத்து காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் என் சொத்தான பட்டா எண்.471, ச.எண்.57/5Lல் கண்ட 1.16 ஏக்கர் நிலத்தையும் வழக்கு சொத்தாக சேர்த்து காண்பித்துள்ளார்கள்.

3. ச.எண்.57/5L தவிர மற்ற சொத்துக்கள் எது எது வழக்கில் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு குறிப்பாக தெரியவில்லை.வழக்கு சொத்து மற்றும் நான் என்னுடைய சொத்தாக குறிப்பிடும் ச.எண்.57/5Lல் கண்ட சொத்தையும் சேர்த்து வாதி மற்றும் 1ம் பிரதிவாதியின் தந்தையான கிருஷ்ணன் என்பவர் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும், அது தான் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 பட்டா என்றால் சரிதான், அதன்பிறகு 1989ல் என் தந்தை ச.எண்.57/5Lஐ பொறுத்து மனு கொடுக்கப்பட்டு, அது எங்கள் சொத்து என்று அதில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது, அதற்கான ஆவணமாக எங்களுக்கு தனி பட்டா எண்.471 என்று வழங்கப்பட்டுள்ளதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

4. தாவா சொத்துக்கள் அனைத்திற்கும் வாதியும், 1ம் பிரதிவாதியும் தான் சட்டப்படியான உரிமையாளர்கள் என்றும், நான் முறைகேடான ஆவணங்களை சமர்ப்பித்து என் பெயரில் பொய்யான ஆவணங்களை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து அனைத்திலும் வாதி, 1ம் பிரதிவாதியின் தந்தை தாயார் இறந்த பிறகு அவர்கள் தான் கூட்டாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, ச.எண்.57/5Lல் நான் தான் அனுபவத்தில் உள்ளேன். வழக்கு நிலுவையில் இருந்தபோது வாதி நான் பிரச்சனை செய்வதாக சொல்லி 04.11.2016ல் என் மீது காவல் நிலையத்தில புகார் கொடுத்திருந்தார் என்றால் சரிதான், என் ஆவணங்களையும் நான் போலீசாரிடம் சமர்ப்பித்தேன், அதற்கு வழக்கு நிலுவையில் உள்ளதால் யாரும் பிரச்சனை செய்யக்கூடாது என்று சொல்லி அனுப்பிவைத்தார்கள். அதே தேதியில் 1ம் பிரதிவாதி என் மீதும், என் தந்தை மீதும் புகார் அளித்திருந்தார் என்றால் சரியல்ல. இருவரும் புகார் கொடுத்திருந்தார்கள் என்றும், எங்களை காவல் நிலையத்திற்கு அழைத்து நாங்கள் எந்த பிரச்சனையும் செய்யமாட்டோம் என்று 07.11.2016ல் நாங்கள் எழுதி கொடுத்தால் புகார் முடிக்கப்பட்டது என்றால் சரிதான், அதேபோல் வாதியும் எழுதி கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.15 ஆவணம் தான் நான் காவல் நிலையத்தில் எழுதி கொடுத்தது என்றால் சரிதான்.

5. மேற்கண்ட விசாரணையின்போது என்னுடைய செட்டில்மெண்ட் ஆவணமான நான் சொல்லும் ஆவணத்தை காவல் நிலையத்தில் காண்பித்தேனா என்றால் காண்பித்தேன். ச.எண்.57/5Lல் கண்ட சொத்தை பொறுத்து என் தந்தை பெயரில் பட்டா மட்டும் தான் உள்ளது என்றும், கிரைய ஆவணம் மற்றும் பாகபிரிவினை ஆவணம் போன்ற எந்த ஆவணமும் இல்லை என்றும், அந்த பட்டாவின் அடிப்படையில் தான் அவர் எனக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் அந்த பட்டாவின் அடிப்படையிலும், அது எங்கள் பூர்வீக சொத்து என்ற அடிப்படையிலும் எழுதி வைத்தார். வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் தான் என் தந்தை பெயருக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

6. மூல ஆவணங்கள் எதுவும் இ ல்லாமல் பட்டாவின் அடிப்படையில் தான் என் தந்தை 11.04.2002ல் எனக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தாரா என்றால் சரிதான். மூல ஆவணங்கள் எதுவும் இல்லாமல் மேற்கண்ட தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்ததால் அது செல்லாது என்றால் சரியல்ல. 07.11.2016ல் காவல் நிலையத்தில் விசாரணையின் போது நான் மேற்கண்ட 11.04.2002 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் ஒப்படைத்தபோது தான் வாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் மேற்கண்ட செட்டில்மெண்ட் ஆவணம் குறித்து தெரியவந்தது என்றால் சரியல்ல, அதற்கு முன்பாகவே அவர்களுக்கு தெரியும்.

7. வாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் தெரியாமல் நாங்களாகவே மேற்கண்ட செட்டில்மெண்ட் ஆவணம் எழுதியுள்ளதால் அது அவர்களை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. மேற்கண்ட செட்டில்மெண்ட் ஆவணத்தில் வாதியும், 1ம் பிரதிவாதியும் தரப்பினர்கள் இல்லை என்றும், அவர்கள் எதுவும் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்கண்ட 07.11.2016ல் ஆவணம் குறித்து தெரிந்தபிறகு தான் வாதி என்னையும், என் தந்தையையும் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்த்தார் என்றால் சரியல்ல, நான் பயிர்கடன் பெற சென்றபோது என் சொத்தின் மீது வழக்கு உள்ளதாக எனக்கு தெரியவந்தது, அதன்பிறகு நான் வழக்கறிஞரை சந்தித்து இந்த வழக்கில் என்னையும், என் தந்தையும் தரப்பினராக

சேர்க்க நடவடிக்கை எடுத்து சேர்ந்தோம். எந்த வருடம் நாங்கள் வழக்கறிஞரை சந்தித்து நடவடிக்கை எடுத்தோம் என்றால், சுமார் 8, 9 வருடங்கள் இருக்கும். நான் சொல்வது தவறு என்றும் 2019ல் தான் தரப்பினர்களாக சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

8. நான் சொல்வது போல் ச.எண்.57/5Lல் எனக்கு எவ்வித பாத்தியமும் இல்லை என்றும் அந்த சொத்து 1ம் பிரதிவாதியான மகாராஜனுக்கு தான் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. என் பெயரில் தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில் வழங்கப்பட்ட பட்டாவும் செல்லாது என்றால் சரியல்ல. எங்களுக்கு உரிமையில்லாத சொத்தை பொறுத்து நாங்கள் வழக்கு நடத்திவருகிறோம் என்றால் சரியல்ல.

ஓம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.